சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **256 / 2022**

பெயர்: நளினி வா.சா.2 தேதி **17.03.2026**

முதல் விசாரணை தொடர்ச்சி

நாங்கள் கோரிய பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கது.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. என்னை சாட்சியம் அளிப்பதற்கு யார் வர சொன்னார்கள் என்றால் எனது கொழுந்தனார் ஈஸ்வரன் வரசொன்னார். வழக்கின் விவரங்கள் எனக்கு சொன்னாரா என்றால் சொன்னார். எனக்கு வழக்கு பற்றி நேரடியாக தெரியாது என்றால் தெரியும். பிரதிவாதிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினரை பற்றி தெரியும். இரண்டாவது பிரதிவாதிக்கும், அவரது தகப்பனாருக்கும் எவ்வளவு சொத்து உள்ளது என்கின்ற விவரம் தெரியுமா என்றால் அது எனது கொழுந்தனாருக்கு தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா-ஆ.1 ஆவணம் எழுதிய சமயத்தில் எந்தெந்த ஆவணங்களை பார்வையிட்டோம் என்றால் எதனையும் பார்வையிடவில்லை. அவ்வாறு வா.சா-ஆ.1 ஆவணம் எழுதிய சமயத்தில் பிரதிவாதிகள் எந்தெந்த ஆவணத்தை கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் எனது கொழுந்தனாருக்கு தான் தெரியும். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணம் எந்த சர்வே எண்ணுக்கு எழுதப்பட்டது என்கின்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணையில் எந்த சர்வே எண்ணிற்கு பணம் கொடுத்தாக குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லவில்லை. சர்வே எண்.127/1-யில் மொத்த விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. எத்தனை செண்டிற்கு வா.சா.ஆ.1 ஆவணம் எழுதப்பட்டது என்றால் 70 செண்டிற்கு எழுதப்பட்டது. இரண்டு பேரும் சேர்ந்து எழுதிவாங்கினோம். மேற்படி 70 செண்டில் எந்த சர்வே எண்ணில் எழுதிவாங்கப்பட்டது என்றால் தெரியாது. தாவா சொத்தில் நாங்கள் விவசாயம் செய்தோமா என்றால் பிரதிவாதிகள் செய்ய விடவில்லை.

2. எந்த மாதம், எந்த தேதியில் பிரதிவாதிகள் இடையூறு செய்தார்கள் என்றால் சரியாக சொல்ல இயலாது. மேற்படி வா.சா-ஆ.1 ஆவணம் எந்த தேதியில் வாங்கப்பட்டது என்றால் 2018 நவம்பர் 4-யில் வாங்கப்பட்டது. மேற்படி தேதியில் எத்தனை பத்திரம் நாங்கள் வாங்கினோம் என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி தேதியில் ரெவன்யூ ஸ்டாம்ப் எதுவும் வாங்கினோமா என்றால் ஞாபகம் இல்லை. பூர்த்தி செய்யப்படாத பத்திரத்தை யார் வாங்கி வந்தார் என்றால் இரண்டாவது வாதி தான் வாங்கி வந்தார். மேற்படி பூர்த்தி செய்யப்படாத பத்திரத்தை யார் பூர்த்தி செய்தார்கள் என்றால் பிரதிவாதிகள் தான் பூர்த்தி செய்தார்கள். மேற்படி பத்திரத்தை எங்கு வைத்து பூர்த்தி செய்தார்கள் என்றால்

எழுநூற்றுமங்கலத்தில் உள்ள எனது மாமனார் வீட்டில் வைத்து பூர்த்தி செய்யப்பட்டது. எனது மாமனாரின் பெயர் சின்னதுரை. அவ்வாறு பத்திரத்தை பூர்த்தி செய்த சமயத்தில் அங்கு யார் யார்கள் இருந்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி ஆவணத்தில் யார் யார் கையெழுத்து செய்தார்கள் என்றால் பிரதிவாதிகள் கையெழுத்து செய்தார்கள் மற்றும் சாட்சிகளை அவர்கள் தான் அழைத்து வந்தார்கள். மேற்படி சாட்சிகள் யார் எனில் பொன்னம்பலம், பரமேஸ்வரன், மகேஷ்வரன் ஆகியோர்கள் கையெழுத்து செய்தார்கள். மேற்படியார்களை பிரதிவாதிகள் தான் அழைத்து வந்தார்கள்.

3. மேற்படி பொன்னம்பலத்திற்கு எந்த ஊர் என்றால் எழுநூற்றுமங்கலம். மேற்படி பொன்னம்பலத்தின் தகப்பனார் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி பரமேஸ்வரனுக்கு எந்த ஊர் என்றால் எழுநூற்றுமங்கலம். மேற்படி பரமேஸ்வரனின் தகப்பனார் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி மகேஷ்வரனுக்கு எந்த ஊர் என்றால் எழுநூற்றுமங்கலம். மேற்படி மகேஷ்வரனின் தகப்பனார் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படியார்களின் தகப்பனார் பெயர் வா.சா-ஆ.1-யில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஒரு கையெழுத்து ஆங்கிலத்திலும், மற்றொரு கையெழுத்து தமிழிலும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி நாகமணி என்பவர் தமிழிலும், தியாகராஜன் ஆங்கிலத்திலும் கையெழுத்து செய்துள்ளார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்திற்கும், வா.சா-ஆ.3 ஆவணத்தில் உள்ள கையெழுத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் இல்லை. தாவா சொத்தின் நான்மால் தெரியுமா என்றால் தெரியாது. நாங்கள் உண்மையிலே யே ரூ.1,00,000/- பணம் கொடுத்திருந்தால் தாவா சொத்தின் விஸ்தீரணம், சர்வே எண், நான்குமால் ஆகியவை தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. மேற்படி வா.சா-ஆ.1 ஆவணம் பிரதிவாதிகள் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் எழுதிய சமயத்தில் பிரதிவாதிகளை யார் அழைத்து வந்தார்கள் என்றால் அவர்களாகவே தான் வந்தார்கள். பிரதிவாதிகள் வந்தபொழுது சாட்சிகள் மற்றும் பிரதிவாதிகளை தவிர வேறு யாரும் வந்தார்களா என்றால் கொழுந்தனாரை தவிர வேறு யாரும் ஞாபகம் இல்லை. மேற்படி பிரதிவாதிகளை எப்படி தெரியும் என்றால் உறவினர்கள். எனக்கு எந்த ஆண்டு திருமணம் நடைபெற்றது என்றால் 1998ம் ஆண்டில் திருமணம் நடைபெற்றது.

4. எனது கொழுந்தனாரின் தகப்பனாரிடம் பிரதிவாதிகள் போக்கியம் வைத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி விவரம் எனக்கு தெரியும் என்றாலும் வழக்கிற்காக தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஈஸ்வரன் தகப்பனார் காலத்தில் வைக்கப்பட்ட போக்கிய பத்திரம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி போக்கிய பத்திரத்தை எனது மாமனார் சின்னதுரை தான் எழுதினார் என்றால் எனக்கு தெரியாது.

மேற்படி சின்னதுரை எழுதிய பத்திரத்தில் பொன்னம்பலம் தான் சாட்சி கையொப்பம் செய்திந்தார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி ஈஸ்வரன் தகப்பனார் காலத்தில் வைக்கப்பட்ட போக்கிய பத்திரத்தில் முதல் பிரதிவாதியும், அவரது கணவரும் தான் கையொப்பம் செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி ஈஸ்வரன் தகப்பனார் காலத்தில் வைக்கப்பட்ட போக்கிய பத்திரத்தில் இரண்டாவது பிரதிவாதி கையொப்பம் செய்யவில்லை என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. மேற்படி ஈஸ்வரன் தகப்பனார் காலத்தில் வைக்கப்பட்ட போக்கிய பத்திரத்தில் சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. மேற்படி ஈஸ்வரன் தகப்பனார் காலத்தில் வைக்கப்பட்ட போக்கிய பத்திரத்தில் ஈஸ்வரனிடம் இருந்து தான் திருப்பப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி ஈஸ்வரன் தகப்பனார் காலத்தில் வைக்கப்பட்ட போக்கிய பத்திரத்தை முதல் பிரதிவாதியின் மகள் திருப்பிவிட்டார் என்கின்ற விவரத்தை ஈஸ்வரன் என்னிடம் சொன்னாரா என்றால் எனக்கு தெரியாது. வா.சா-ஆ.1 ஆவணத்தில் உள்ள சொத்திற்கும் பிரதிவாதிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து சர்வே எண். 129/1-யில் தான் உள்ளது என்றால் சரியல்ல. நாங்கள் வா.சா.ஆ.1 ஆவணத்தை ஏன் பதிவு செய்யவில்லை என்றால் சொந்தகாரர்கள் என்பதால் பதிவு செய்யவில்லை. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தை நாங்களே தயாரித்தால் தான் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா-ஆ.1-யில் உள்ள சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்றால் ஏழுநூற்றுமங்கலத்தில் உள்ளது. உண்மையிலேயே நாங்கள் பிரதிவாதிகளுக்கு பணம் கொடுத்திருந்து, வா.சா.ஆ.1 ஆவணத்தை ஏற்படுத்திருக்கும்பட்சத்தில் மேற்படி சொத்தை நாங்கள் பற்றுகை செய்ய மனு தாக்கல் செய்திருப்போம் என்றால் சரியல்ல. சர்வே எண். 129/1-யில் ஊரக வட்டார வளர்ச்சியின் கீழ் பணி செய்ததற்காக பிரதிவாதிகள் நிலத்திற்கு ஈஸ்வரன் ரூ.1,90,000/- பணம் பெற்றிருந்தார் என்றால் இல்லை. மேற்படி பணம் சம்மந்தமாக தான் இரண்டாவது பிரதிவாதிக்கும், ஈஸ்வரனுக்கும் பிரச்சனை ஏற்பட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வா.சா-ஆ.1 ஆவணம் எங்களால் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.03.17 16:29:30 +0530

சார்பு நீதிபதி

குளித்தலை.